

# வாரந்தோறும் ஒரு தீபம்!

உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும்,
என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது.
(சங்கீதம்119:105)

(வாரம் முழுவதும், புத்தொளி சுடரில் நடத்தும் தெய்வீக செய்திகள்!)
(வியாழன்தோறும்)

| 18.08.2022 | 08. இயேசுவுக்கே புகழ்சேர்க்கும் எழுப்புதல் வேண்டும்! |
|---|---|



ஒரு மனுஷன் எண்ணற்ற உபத்திரவங்களைச் சுமந்து கொண்டு வந்தும் “அவன் இருதயத்தின் கிண்-கிணி மணி ஓசையை” ரீங்காரமாய் நாம் கேட்கும்போது, அந்த காட்சி நம் உள்ளத்தை கொள்ளை கொள்ளாதோ?

சோதனை உச்சக்கட்டத்திற்குச் சென்ற ஒருவன், முற்றிலும் ஜெயம் பெற்றவனாய் திரும்ப வருவதைக் காண்பது, கண்கொள்ள காட்சியன்றோ! சூடு- பாலைவனத்தையும் ஊடுருவச் சென்ற ஒரு யாத்ரீகனின் உடல், சற்று துவண்டதுபோல் தோன்றினாலும், உடைபடாத அவனது சகிப்புத் தன்மை நமக்குப் புத்துணர்வு ஊட்டுகிறது அன்றோ! ஆ, இந்த அதிசயங்கள் அவரது கிருபைக்கே நிலைத்திருக்கும் சாட்சியும், புகழ்ச்சியும் ஆகட்டும்! எண்ணற்ற வீறுகொண்ட விசுவாச வீரர்களை எழுப்பட்டும்! இயேசுவின் புகழ்கொடி, பட்டொளி வீசி பறக்கட்டும்!

இந்த மண்ணின் ஆதாரம் யாவும் இழந்தும்!
இரைச்சலான சமுத்திரம் போலவே ஆனாலும்!

இளைப்பாறுதல் அமைதி கொண்டவன் இவனென்று.....
இறைவன் பாதுகாத்திடும் அதிசயம் இவனென்று.....

இயேசுவுக்கு புகழ் சேர்க்கும் அந்த மாந்தரில்,
நானும் ஒருவன்தானோ?

– ரத்னம்